# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,
# உள்ளூரதிகார சபைகள்
# (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1985 மார்ச் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985 மார்ச் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : சதம் 45

தபாற் செலவு : சதம் 60

**1985 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, உள்ளூராதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[1985 மார்ச் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 58/82

1649

**1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உள்ளூராதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1985 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, உள்ளூராதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உள்ளூராதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்றை அமைச்சர் பெறுமிடத்து, அவர் உள்ளூராதிகார சபையினால் ஆக்கப்பட்ட கட்டளையை உறுதிப்படுத்துதல், வேறுபடுத்துதல், அல்லது தள்ளுபடிசெய்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) அமைச்சர்—

(அ) மூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றினை ;

(ஆ) நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றினை,

விசாரணை செய்வதற்கான அவரது தத்துவத்தை, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவுக்குக் கையளிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கையளிப்பு எப்படியிருப்பினும், ஏதேனும் உள்ளூராதிகார சபையின் கட்டளையொன்றுக்கெதிரான மேன்முறையீடொன்றை விசாரணைசெய்வதற்கான தத்துவத்தை அமைச்சர் தானே பிரயோகிக்கலாமென்பதுடன், எந்த சொல்லப்பட்ட உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவுக்கு அத்தகைய

தத்துவம் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு அத்தகைய தத்துவத்தை அத்தகைய விடயத்தில் பிரயோகித்தலுமாகாது.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "(1) ஆம் உட்பிரிவின்கீழ் பகிரங்க அலுவலர் ஒருவரால்" என்ற சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினால்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :—

"உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவுக்குத் தத்துவத்தைக் கையளிப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, "பட்டின சபைகள் கட்டளைச்சட்டம், கிராமசபைகள் கட்டளைச்சட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பட்டினசபைகள் கட்டளைச்சட்டம், கிராமசபைகள் கட்டளைச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டம்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) இச்சட்டத்தின்கீழான மேன்முறையீடுகள் எக்கால எல்லையினுள்ளும் எவ்விதத்திலும் செய்யப்படவேண்டுமோ அக்கால எல்லையும் அவ்விதமும் தொடர்பாக அமைச்சர் விதிகளை ஆக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தில், "நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை" என்ற சொற்களுக்குப் பதிலாக "நகரசபை அல்லது அபிவிருத்திச்சபை" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*